# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## *2013 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க,* பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டம்

*(2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2013,* நவெம்பர் மாதம் 15 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 7.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டம்**

[*2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ- 27/2012*

**பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம், ''பௌத்த அலுவல்கள் ஆணையாளர்'' என்னும் சொல்லமைப்பு முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவில் தவிர அச்சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொல்லமைப்புக்குப் பதிலாக, "பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *318 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) "பிக்கு" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

''பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் என்று பொருளாகுமென்பதுடன், எவரேனும் ஆணையாளரையும், பிரதி ஆணையாளரையும் மற்றும் உதவி ஆணையாளரையும் உள்ளடக்கும்; அத்துடன்

(ஆ) ''பௌத்த அலுவல்கள் ஆணையாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும் .

*உரிமைகளையும், பொறுப்புக் களையும் மற்றும் கடப்பாடு களையும் கைமாற்றுதல்.*

**4.** (1) இச்சட்டம், தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்குள்ள எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும் மற்றும் கடப்பாடுகளும் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் உரிமைகளாகவும், பொறுப்புக்களாகவும் மற்றும் கடப்பாடு களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) பௌத்த அலுவல்கள் ஆணையாளரினால் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தொடங்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்குவ தற்கு முன்னர் பூர்த்திசெய்யப்படாததுமான ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினால் தொடர்ந்து நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படலாம்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்